முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு காணொளிக் காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு கடனுதவி வழங்கி விழாப் பேருரை ஆற்றியதை தொடர்ந்து வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன்வழங்கும் விழாவில் கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இரா.துரைராஜ் எம்.சி. தலைமை! சைதை கிழக்குப் பகுதியில்

முதல்வர் பிறந்தநாள் விழா! இந்து ராம் - நக்கீரன் கோபால் வாழ்த்துரை!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 9-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் ஏடும் நாடும் போற்றும் எழுச்சி மிகு முதல்வர் பிறந்தநாள் ஏற்றமிகு சாதனைத் திருவிழாவின் கருத்தரங்கம் நாளை (10.03.2025 திங்கட் கிழமை மாலை 5.00 மணிக்கு வேளச்சேரி குருநானக் கல்லூரி கலை அரங்கத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் மண்டல வார்டுகுழு தலைவர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பத்திரிகையாளர்கள் இந்து என்.ராம், நக்கீரன் கோபால், ரெங்கராஜ் பாண்டே, காந்தாராஜ் கல்கி ப்ரியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கும் கருத்தரங்கம் நிகழ்ச்சியை மருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்துகிறார்.

கருத்தரங்கத்தில் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி. மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக் குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் எம்.சி. 172வது வட்ட கழக செயலாளர் நேரு நகர் எஸ். பாட்சா மாவட்ட பிரதிநிதி வே.முருகன் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள் நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் சட்ட மன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ் காரம்பாக்கம் கணபதி ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், க.தனசேகரன் எம்.சி. பாலவாக்கம் சோமு, போரூர் எஸ்.அருணாசலம், விஞர் காசிமுத்து மாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாரன் எம்.சி., மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, வாசுகி பாண்டியன், ரத்னா லோகேஷ்வரன் எம்.சி, எம். எஸ். ஹரிபாபு, தொகுதி மேலிடப் பார்வையாளர் பரிதி இளம்சுருதி எம்.சி, பகுதி மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள் அரிமா சு. சேகர், துரை.கபிலன், கே.கண்ணன் எம்.சி, மு.இராஜா எம்.சி, பெருங்குடி எஸ்.ரவிச்சந்திரன் எம்.சி, பாலவாக்கம் வி.எ. மதியழகன் எம்.சி, நொளம்பூர் வே. ராஜன் எம்.சி, கோவிலம்பாக்கம் சு.வெங்கடேசன், அயப்பாக்கம் அ.ம. துரை வீரமணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி, சைதை மா.அன்பரசன், மேடவாக்கம் ப.ரவி, எம்.கே. ஏழுமலை, அ.அரிகிருஷ்ணன், உ.துரைராஜ் ,எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், ஆர்.பாலசுந்தரம், பி.ஜே. பாஸ்கர், வ.செல்வகுமார் எம்.சி., த.பஷீர், வீர.கனிமொழி, ,பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி. ஜானகிராமன், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், எம். வினாயகமூர்த்தி, சா. சங்கர், கணேஷ் எம்.சி ஜே.இ. பாண்டியன், கா.வி. தியாகராஜன், செ.ரவி,

சைதை சாதிக், நா. மணிகண்டன், அஞ்சல் என்.ராமன், கோ. பாஸ்கரன், ப. அருண்குமார், கழக த. ரமேஷ், சி.பரிமேலழகர், கொட்டிவாக்கம் பார்த்திபன், சி.சுரேஷ், எம். ஆர். சசிகுமார், கே. குமரேசன், ஆ. விஜய பாலா, ராமாபுரம் வி. ராஜேஷ், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், த.ஜெகதீசன், நா. முகேஷ் கண்ணா, மருத்துவர்,அனீஸ், எஸ். பி. அருள், வி. ஜெயச்சந்திரன்,

சைதை கிழக்கு மேற்கு வட்டக் கழக செயலாளர்கள் எஸ். ஆர். செந்தில், நா. ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் கா. மணி, கோட்டூர் கோ. சண்முகம், சைதை ஆ.வரதன், சை.மு. சேகர், அட்கோ. கமலநாதன், நா. தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம். நாகா

மாவட்ட பிரதிநிதிகள் டி.வி. நரசிம்மன், ஜி. செல்வராஜ், க. உமாபதி, ஜி . யோவான், வே.ரமேஷ், குமார், என். நந்தகோபால், எஸ். ராதாகிருஷ்ணன், எஸ். ஜே. சலாம், ச.சேகர், இரா.சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, மு.மகேஸ், லாரன்ஸ், கே. எம். எஸ். கணேசன், ஏ. மஜித்,

கழக பேச்சாளர்கள் க .ஒப்பிலாமணிஇ கோ . தன சேகரன்இ மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.எஸ். பாபு, ஈகை.ஆர்.செல்வம், பி.திவாகர், எஸ்.மணிகண்டன், பார்சன் கே.லோகு, உள்ளிட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் பகுதி அளவிலான அணிகளின் துணை அமைப்பாளர்கள் வட்ட செயற்குழு உறுப்பினர்கள் வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பாக இளைஞர் அணி நிர்வாகிகள் பாக முக வர்கள் மற்றும் பாக பணியாளர்கள் சார்பு மன்ற நிர்வாகிகள் வட்ட கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் வீராங்கனைகள் பெருந் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர் நிகழ்ச்சி முடிவில் பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன் நன்றியுரை நிகழ்த்துகிறார்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, நேற்று (8.3.2025), தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள தமிழ் பெரும்புலவர் ஔவை பெருமாட்டியாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் பி. கீதா ஜீவன், என். கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி ஆர்.பிரியா மற்றும் ஏ.எஸ்.குமரி, வே. ராஜாராமன், கவிதா ராமு, மரு. இரா. வைத்திநாதன், முனைவர் ந. அருள், ச.செல்வராஜ், விஜயா தாயன்பன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

வே.வாசு தலைமை! அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. - கூ.பி.ஜெயின் எம்.சி. - ஐசிஎப் வ.முரளிதரன் முன்னிலை!

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி கி.ஜெய்சங்கர் இல்ல மணவிழா!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்து!

சென்னை, மார்ச்.9-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி கி.ஜெய்சங்கர் இல்லத் திருமண விழா அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., கூ.பி. ஜெயின் எம்.சி., ஐசிஎப் வ. முரளிதரன் முன்னிலையில் நடைபெறுகிறது.

தலைமை வே.வாசு மு. எம்.சி.,

அமைச்சர் பி.கே.சேகர் பாபு வாழ்த்துரை வழங்குகிறார்.

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி கி.ஜெய்சங்கர் ஈஸ்வரி ஜெய்சங்கர் அவர்களின் புதல்வி ஜெ.அர்ச்சனா விற்கும் பி.கண்ணன், குணபூஷணம் அவர்களின் புதல்வன் கே.மணிகண்டனுக்கும் நாளை (10.03.2025 -திங்கட் கிழமை) காலை 6:00 மணி முதல் 7:30 மணிக்குள்ளாக சென்னை-82, பெரியார் நகர், 29, கார்த்திகேயன் ரோடில் அமைந்துள்ள திருவள்ளுவர் கூட்டுறவு திருமண மாளிகையில் நடைப் பெறுகிறது.

முன்னதாக 09.03.2025 ஞாயிறு மாலை 6.00 மணியளவில் திருமண வரவேற்பு நடைப்பெறுகிறது.

மாநில பொறியாளர் இணைச் செயலாளர் அ. வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர் கூ.பி.ஜெயின் எம்.சி., கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் ஐசிஎப் வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., டி.வி.செம்மொழி, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், சுதா தீனதயாளன், வானவில் விஜய், ஜி.ஜெ.பிரபு, லதாவாசு எம்.சி., விக்னேஷ் சீனிவாசன், எம்.சுரேஷ் முன்னிலையிலும்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு மு.எம்.சி. தலைமையிலும் நடைப்பெறுகிறது.

புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபள்யூ. அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, ச.மனேகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, வி.சபாபதி, மு.பரமானந்தம், ந.குமார், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, வ.ரமேஷ்பாபு, டி.ஸ்டாலின், எ.சத்தியநாராயணன், கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

மணமக்களை வாழ்த்துபவர் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு,

தயாநிதி மாறன் எம்.பி., மேயர் திருமதி. பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்சி., பரிதி இளம்சுருதி எம்சி., ஐபிஎப் ஆர்.வரதன், ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா. இளையா, ம.கலைசெல்வி, ஐசிஎப். மு.சுரேஷ்பாபு, சிட்கோ. சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா. அகிலன், பா.ஜானி, சொ. முருகேசன், ப.லோகுபாபு, கே.பி.ஆதவன்மணி, அமுதா பொன்னிவளவன் எம்சி., தனலட்சுமி சரவணன் எம்சி., ஆ.பிரியதர்ஷினி எம்சி., ஆர்.கோபாலகிருஷ்ணன், கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க. மணிமாறன், எஸ்.கே. பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ. பி. சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன், ஆ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் எம்.குணசேகரன், என்.எஸ். விஜயகுமார், வழக்கறிஞர் கே.சுப்பிரமணி, எஸ்.பி.கெஜா, பி. ஜெயந்தி, உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கா.யுவராணி, ஆர்.ராஜசேகர், ஜிம்.என்.மோகன்குமார், விராஜமாணிக்கம், ஓம்.புரசை கே. சேகர், சா. அருண்குமார், கே.ஜி.அய்யாதுரை, ராபர்ட் ராஜன், கே.சேகர், ஆர்.உதயசேகர், எம்.பசுபதி, ஜி.ராதாகிருஷ்ணன், சுரேஷ்வாசு உள்ட்ப பலரும் வாழ்த்துவார்கள்.

நன்றியுரை கே.ஜெய் சங்கர், ஈஸ்வரி ஜெய்சங்கர், ஜெ.சுவாதி

கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர் நீக்க – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியன !

தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் - தமிழர்க்கெல்லாம் திருநாள்!

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா.செ.சந்திரஹாசன் அறிக்கை!

சென்னை, மார்ச் 9 –

ஈழ எதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின்நிறுவனர் கா. செ. காந்திராசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், ''தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம். ஈழத் தமிழர் உள்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம் ஈழத்தமிழர் உட்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் உங்கள் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும். நாளொரு சாதனை, பொழுதொரு திட்டம் எனக் கணந்தோறும் தமிழினத்தைக் கரையேற்றும் வரலாற்றைப் படைத்து வருகிறீர்கள். கடைத்தேற்றும்

தமிழ்நாட்டில் அடைக்கலம் தேடி வந்திருக்கும் எமது ஈழ ஏதிலியர் சமுதாயத்திற்கு, உள்ளூர் மக்களுக்கு என்னென்ன உரிமைகளும் சலுகைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றனவோ, அவை அத்தனையும் செய்து கொடுத்துள்ள உங்கள் ஆட்சியின் மாட்சியைப் பாராட்ட வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகின்றோம்.

அண்டை நாட்டில் பிறந்த எங்களுக்குத்தான் என்றில்லாமல் அகிலம் முழுவதும் வாழும் தமிழர் நலன்களைப் பேணவும், வளர்க்கவும் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்திவரும் தங்களைப் பார்த்து தமிழன்னையே பிரமித்து நிற்கிறாள். கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர்நீக்க நீங்கள் ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பரியன. அத்தகைய தொண்டுள்ளமும், தொலை நோக்கும் கொண்ட தாங்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

என் சார்பிலும் எம்.ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பிலும் தந்தை செல்வா வழியில் கரையேறத் துடிக்கும் தமிழீழ மக்கள் சார்பிலும் எமது உளமார்ந்த பிறந்த நாள் வாழத்துக்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு - மத்திய - கிழக்கு மாவட்ட ஒருங்கிணைந்த தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு, மத்திய, கிழக்கு மாவட்ட ஒருங்கிணைந்த தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (09.03.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில், திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூர், கே.பி.எஸ்.கிரிக்கெட் மைதானம் கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலை வகிக்கிறார்கள்.

அது சமயம் ஆலோசனை கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு, மத்திய, கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

பொருள்: கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மார்ச் 12 ஆம் தேதி திருவள்ளூரில் "தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்" ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு வருகை தருவது குறித்து

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,	திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.	வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.	செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.	பொறுப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

உச்சநீதிமன்ற – ஓய்வு பெற்ற

நீதிபதி வி.ராமசாமி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, மார்ச் 9 –

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி வி.ராமசாமி அவர்கள், நேற்று இரவு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. வி. ராமசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ராமசாமி அவர்கள் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றி 1971-இல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்வு பெற்றவர். மேலும், 1987-இல் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், பின்னர் 1989-இல் உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் நியமிக்கப் பட்டு 1994 வரை அவர் பணியாற்றினார்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சட்டத் துறையைச் சேர்ந்தோருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, எழும்பூர், எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நேற்று (8.3.2025) உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ஆகியோர் கலந்துகொண்டு, ரெயின்ட்ராப்ஸ் சமூக அமைப்பின் சார்பில் சரித்திரம் படைத்த சாதனை பெண்களுக்கு விருதுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் எத்திராஜ் மகளிர் கல்லூரி முதல்வர் வி.எம். முரளிதரன், மாநில திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் சுல்தான் இஸ்மாயில், ரெயின்ட்ராப்ஸ் சமூக அமைப்பின் நிறுவனர் அரவிந்த் ஜெயபால், வி.ஜி. சந்தோசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியத்தில் அவளூர் ஊராட்சியில் ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் .திருமதி கீதா வெங்கடேசன். ஏற்பாட்டில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.